
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1161**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# மாநாடு

**ர.பிரகாசு**

**109**

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**


## சுயாட்சிக் கொள்கைக்கு முகம் கொடுத்த நீதிக்கட்சி!

இந்திய ஆட்சியை மறுசீரமைப்பதற்காக 1935-இல் பிரிட்டிஷ் அரசு, இந்திய அரசு சட்டத்தை இயற்றியது. இச்சட்டம், மாகாணங்களையும் சமஸ்தானங்களையும் ஒரே கட்டமைப்பின் கீழ் இணைத்து, கூட்டாட்சி முறையை அறிமுகப்படுத்தியது. மாகாணங்களுக்கு அதிக உரிமையை வழங்கியது. அதை நீதிக்கட்சி வரவேற்றது. குறிப்பாக, 17.8.1936 அன்று ஸ்ரீவில்லிப்புத்தூரில் நடைபெற்ற ராமநாதபுரம் ஜில்லா இரண்டாவது ஜஸ்டிஸ் மாநாட்டில், இது குறித்த ஆழமான கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

அங்குள்ள கரிசல்குளம் கிராமத்தில் மாநாடு நடைபெற்றது. பெரியார், டபிள்யூ பி.ஏ.சௌந்தரபாண்டியனார் உள்ளிட்ட பலர் ரயிலில் ஸ்ரீவில்லிப்புத்தூர் வந்தனர். அமைச்சர் குமாரசாமி ரெட்டியாரை ஸ்ரீவில்லிப்புத்தூர் நகராட்சி நிர்வாகம் வரவேற்று, முக்கிய வீதிகளின் வழியாக வாத்தியங்கள் முழங்க, நகராட்சி அலுவலகத்திற்கு அழைத்துச்சென்று மரியாதை அளித்தனர். மாநாட்டுக் கொட்டகை சிறப்போடு அமைக்கப்பட்டு, எண்ணற்ற நீதி வாக்கியங்கள் எழுதப்பட்டிருந்தன. மாநாட்டுப் பந்தலுக்கு வரும் பல வழிகளிலும் இதே போல நீதி வாக்கியங்கள் எழுதப்பட்டு விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. பந்தலுக்கு அருகில் விருதுநகர் நாடார்கள் சாப்பாட்டு விடுதி ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. ஆயிரக்கணக்கான மக்களுக்கு அங்கு உணவு பரிமாறப்பட்டது.

மொத்தம் மூவாயிரத்திற்கும் மேற்பட்டோர் திரண்டிருந்தனர். குமாரசாமி ரெட்டியார் உட்பட தலைவர்கள் அனைவரும் பிற்பகல் 2.30 மணிக்கு பந்தலுக்கு வருகைதந்து மாநாட்டைத் தொடங்கிவைத்தார். முன்னதாக, சொ.முருகப்பா மாநாட்டுக் கொடியை ஏற்றிவைத்து, சிற்றுரை ஆற்றினார். தலைமை உரையாற்றிய குமாரசாமி, நாட்டு மக்களுக்கு நீதிக்கட்சி செய்திருக்கும் நன்மைகளை எடுத்துக்கூறினார். தனக்கு ஏகோபித்த வரவேற்பு அளித்த கிராம மக்களுக்கு நன்றி கூறினார்.

ஓவியம் : சிகரன்



அடுத்து வரவேற்புரையாற்றிய சிவதாணுப் பிள்ளை, "இன்னும் சில மாதங்களில் புதிய அரசியல் சட்டத்தின்படி மாகாணத்தில் சுயாட்சி வரப்போகிறது. இத்திட்டம் பல குறைபாடுகளை உடையது. நம் நாட்டு மக்களிடையே வளர்ச்சி பெற்றுவரும் அரசியல் சுதந்திர உணர்ச்சிகளைப் பூரணமாகத் திருப்தி செய்யும் தன்மையுடையது அல்ல. ஆயினும் சுயராஜ்ஜியத்திற்கு இது முதல்படி என்பதில் சந்தேகமில்லை. ஆதலின், இதை நிராகரித்துத் தள்ளிவிடாமல் ஏற்று நடத்திப்பார்க்க வேண்டுமென்பதே நம் விருப்பம். இத்திட்டத்தின்படி மாகாண கவர்னர்களுக்குப் பல பாதுகாப்புகளும் விசேஷ அதிகாரங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இன்று அனுஷ்டானத்தில் இருக்கும் இரட்டை ஆட்சியைக் காட்டிலும் இப்புதிய திட்டத்தின்படி மந்திரிகளுக்கு உண்மையான பொறுப்பும் தேசநல காரியங்களைத் தடங்கலின்றி நிறைவேற்றுவதற்கு அதிகமான வசதிகளும் ஏற்பட்டிருக்கின்றன" என்றார்.

மாநாட்டுக்குத் தலைமை வகித்த சி.டி.நாயகம் எம்.எல்.சி. தொடக்கக் கல்வியின் அவசியம், அதற்காக நீதிக்கட்சி அரசு எடுத்த முன்னெடுப்புகளை மிக விரிவாகப் பேசினார். "பெறப்போகும் மாகாண ஆட்சி என்னும் பச்சிளங் குழந்தையை அன்போடும், ஆர்வத்தோடும், அறிவோடும், திறமையோடும் பேணி வளர்க்கக்கூடியவர்கள் ஏற்கெனவே சோதனையில் தேறிய நீதிக்கட்சியினரே ஆவார்கள். அவர்களிடமே மக்கள் அந்தப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார் அவர். பின்னர், மாநாட்டுக்கு வர இயலாதவர்கள் பலர் அனுப்பியிருந்த வாழ்த்துக் கடிதங்கள் வாசிக்கப்பட்டன. இறுதியாக, நீதிக்கட்சியை வலிமையாக வைத்திருக்க வேண்டியதன் அவசியம் பற்றி பெரியார் கூறியதுடன் மாநாடு முடிவுற்றது. பின்னர், அதே திடலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பெரியார், சொ.முருகப்பா ஆகியோர் நீதிக்கட்சியின் வேலைத்திட்டங்களைப் பற்றி விரிவாகப் பேசினர்.

**...கூட்டம் திரளும்**

## உலகளாவிய உயர்வுக்கு வழி விடவும்!

'தமிழ்நாட்டில் இந்தியைத் திணிக்க முயலும் மும்மொழிக் கொள்கைக்கு எதிராக, நமது முதலமைச்சர் எடுத்திருக்கும் உறுதியான நிலைப்பாட்டை முழுமையாக ஆதரிக்கிறேன்' என எக்ஸ் தளத்தில் கருத்துப் பகிர்ந்துள்ளார், வேம்பு தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவர் சேகர் வேம்பு. ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதானைக் குறிப்பிட்டு அவர் எழுதியுள்ள பதிவில்,

"எனக்கு இந்தி பேசும் நண்பர்கள் பலர் உள்ளனர். நாங்கள் மிகவும் நன்றாகப் பழகுகிறோம். அவர்கள் பேசும் மொழியின் அடிப்படையில், நான் யாரையும் வெறுப்பதில்லை. இந்தியாவின் உண்மையான பலம் அதன் பன்முகத்தன்மைதான். அதே நேரத்தில், அந்தப் பன்முகத்தன்மையைச் சேதப்படுத்தும் எதையும் நான் எதிர்க்கிறேன். இப்போது, பல இடங்களில் இந்தி/சமஸ்கிருதத் தலைப்புகளைத் திணிப்பதைப் பார்க்கையில், திராவிடம் அல்லது தமிழ் பேசும் மக்களுக்கு இழைக்கப்படும் ஒரு துன்புறுத்தலாகவே பார்க்கிறேன்.

என் சிறுவயதில் ஆங்கிலம்கூட என்னால் முழுமையாகக் கற்க முடியவில்லை. பன்னிரண்டாம் வகுப்பு படித்தபோது, தமிழிலோ ஆங்கிலத்திலோ என்னால் சரளமாகப் பேசவோ, முறையான கட்டுரைகளை எழுதவோ முடியவில்லை. ஆங்கில செய்தித்தாள்களைத் தவறாமல் படிக்கத் தொடங்கி, அதை மேம்படுத்துவதில் முயற்சியை மேற்கொண்டபோதுதான் என் ஆங்கிலம் மேம்பட்டது. அதன்பின்னர், உயர்கல்வி நிறுவனங்களில் நாடு முழுவதிலுமிருந்து வந்த மாணவர்களுடன் உரையாடுகையில் கற்றுக்கொண்டேன்.

'குழந்தைகள் மூன்று மொழிகளைக் கற்றுக்கொள்ள அழுத்தம் கொடுப்பதன் மூலம் அவர்கள், கணிதம், அறிவியல் ஆகியவற்றைக் கற்றுக்கொள்வதையும், சிந்திப்பதற்கான நேரத்தையும் குறைக்கிறது' என நவீன ஆய்வுகள் சொல்கின்றன.

தற்போது, வேறு எந்த இந்திய மொழியாலும் அளிக்க முடியாத மாபெரும் பொருளாதார மற்றும் உலகளாவிய நன்மைகளை ஆங்கிலம் வழங்குகிறது. ஆரம்பத்திலேயே ஆங்கிலத்தில் கவனம் செலுத்திய மாநிலங்கள், தொழில்நுட்பம் சார்ந்த தொழில்களில் சிறப்பாகச் செயல்படுகின்றன. அதில் தமிழ்நாடு சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. இன்றைய உலகில் அறிவியல், கணிதம், தொழில்நுட்பம், நிரலாக்கம், செயற்கை நுண்ணறிவு மற்றும் உலகளாவிய வணிகம் ஆகியவற்றுக்கு ஆங்கிலமே சர்வதேச மொழியாக விளங்குகிறது.

ஆகவே, மும்மொழி முன்னெடுப்பைக் கைவிட்டு, தாய்மொழி மற்றும் ஆங்கிலம் ஆகியவற்றைத் தெளிவான கொள்கையாக ஒன்றிய அரசு அறிவிக்க வேண்டும்" என்கிறது அவரது பதிவு.

# பாசறை படிப்பறை

**கௌதம் ராஜ்**

**109**

**சுயமரியாதை-சமத்துவம்- சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## திராவிடர் ஆட்சி தொடரட்டும்!

தி.மு.கழகம் இன்றைக்குத் தேர்தல் அரசியல் இயக்கமாகச் செயல்பட்டாலும் அதன் தொடக்க ஆண்டுகளில், அடித்தட்டு மக்களை சமுதாயப் புரட்சி நோக்கி தயார்படுத்தும் பெரும் பணியை மேற்கொண்டு வந்தது.

1951-ஆம் ஆண்டு, இந்தியா முழுவதும் உள்ள பிற்படுத்தப்பட்ட - பட்டியல் ஜாதி மக்களுக்கு இடஒதுக்கீட்டு உரிமையைப் பெற்றுத்தந்த முதல் அரசியல் சட்டத்திருத்தப் போராட்டம், ராஜகோபாலாச்சாரி அரசு கொண்டுவந்த 'குலக்கல்வி' திட்டத்திற்கு எதிரான போராட்டம் என இவை இரண்டையும் மக்கள் விடுதலைப் போராட்டங்களுக்குச் சான்றாகச் சொல்லலாம்.

இன்றைக்கும் பல தரப்பைச் சேர்ந்த மக்கள், தி.மு.கழகத்தை ஆதரிப்பதற்கு அதன் சமூக சீர்திருத்தக் கொள்கைகளும் முக்கிய காரணமாக இருக்கிறது. அப்படியான காரணங்களைக் காலவரிசையில் பட்டியலிடும் நூல் காட்டாறு பதிப்பகம் சார்பில் அண்மையில் வெளிவந்த "வேண்டும், மீண்டும் திராவிடர் ஆட்சி" எனும் நூல். எழுத்தாளர் அதி அசுரன் இந்நூலை சீரிய முறையில் தொகுத்துள்ளார்.




இந்நூலின் முதல் பதிப்பு 2021 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக வெளியிடப்பட்டது. 2021-2026 வரை திராவிட மாடல் அரசு சாதித்தவைகள் பலவற்றையும் இணைத்து, இந்தப் பதிப்பு விரிவாக்கம் பெற்றுள்ளது.

2021-2026 வரையிலான திராவிட மாடல் ஆட்சியில் என்னென்ன சமூக சீர்திருத்தத் திட்டங்கள் எல்லாம் தீட்டப்பட்டன, அவை பிற்படுத்தப்பட்ட - பட்டியல் இன மக்களின் வாழ்க்கையில் ஏற்படுத்திய மாற்றங்கள் எத்தகையவை என்பதை எல்லாம் இந்நூல் மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறது. வெறும் திட்டங்களை வரிசைப்படுத்தாமல், அவற்றின் சமூக நோக்கத்தை முற்போக்கு கண்ணோட்டத்துடன் எண்ணிப்பார்ப்பதே இந்த நூலின் பலம்.

**"வெறும் திட்டங்களை வரிசைப்படுத்தாமல், அவற்றின் சமூக நோக்கத்தை முற்போக்கு கண்ணோட்டத்துடன் எண்ணிப்பார்ப்பதே இந்த நூலின் பலம்."**

'புதுமைப்பெண் திட்டம்' மூலம் பெண் கல்வி, எளிய பின்னணி கொண்ட மாணவர்களின் கனவுகளுக்குக் கைகொடுக்கும் 'நான் முதல்வன்', ஆதிதிராவிட மாணவர்கள் அயல் நாடுகளில் கல்வி பயில 'அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவித்திட்டம்', 'தோழி விடுதிகள்', 'சிப்காட் குழந்தைகள் காப்பகம்' எனப் பல திட்டங்கள் நீண்டகால நோக்கில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை இந்நூல் பதிவுசெய்கிறது.

வெறும் திட்டங்களைத் தீட்டி, அவற்றை செயல்படுத்தும் அரசாக மட்டும் இல்லாமல், சமூகத்தில் முற்போக்கான பல மாற்றங்களுக்கு அந்தத் திட்டங்கள் பயன்பட வேண்டும் எனும் நோக்கில் நம் 'திராவிட மாடல் அரசு' நிறைவேற்றியுள்ள திட்டங்களையும், 1967 முதல் தற்போது வரை தி.மு.கழக ஆட்சியில் மட்டும் இப்படியான சமூக அக்கறை உள்ளார்ந்த ஒன்றாக இருந்து வருவதை இந்நூலை வாசிப்பவர்கள் தெளிவாக உணர முடியும்.

மீண்டும் திராவிடர் ஆட்சி அமைய அயராது உழைக்க உறுதியேற்போம்!

**...வாசிப்போம்.**

## ஃப்ளாஷ்பேக்

### நினைவுகளை விட்டு அகலாத தலைவர்!



2018-ஆம் ஆண்டில், முத்தமிழறிஞர் கலைஞரை, நானும் எனது துணைவியார் ராணியும் சென்று சந்தித்தபோது எடுத்த படம். தலைவரை தங்கப்பேழையில் வைத்து பாதுகாப்பது போல கண்ணும் கருத்துமாகப் பார்த்துக்கொண்டிருந்த நேரம். என் துணைவியார் ராணி, மாநில கல்வித்துறை அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வுபெற்றவர். திருவாரூரில், திராவிடர் கழகத்தில் செயல்பட்டுவந்த அவரது தந்தை பெருமாள் அவர்களும் கலைஞரும் நண்பர்கள். அதனால், எப்படியாவது தலைவரைப் பார்த்துவிட வேண்டும் என அண்ணன் சண்முகநாதன் அவர்களிடம் நேரம் கேட்டுச் சென்று பார்த்தோம். என் துணைவியார் தன்னை அறிமுகம் செய்துகொண்டபோது, "அப்பா எப்படி இருக்கிறார்" என கையை உயர்த்திக் கேட்டது, எங்கள் நினைவுகளை விட்டு என்றும் அகலாது.



விக்டர் தேவசகாயம்

**– விக்டர் தேவசகாயம், முன்னாள் பேராசிரியர், டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### அணிவகுப்பு உள்ளே செல்கிறது!

1962-ஆம் ஆண்டு, கழகம் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியாக நுழைந்தது. சென்னை கடற்கரையில் நடைபெற்ற வெற்றிவிழாவில் உரையாற்றிய பேரறிஞர் அண்ணா, "நான் வெளியே நிற்கிறேன்; என் அணிவகுப்பு உள்ளே செல்கிறது. தலைவன் இல்லாமல் அணிவகுப்பு அமைக்க முடியும். அணிவகுப்பு இல்லாமல் தலைவனை அமைக்க முடியாது" என ஊக்கமூட்டினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900